வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 07.06.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 159 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஈழத்தமிழர் சமஷ்டியை பெற இந்தியா அரணாக வேண்டும்!

## நரேந்திர மோடிக்கான வாழ்த்து கடிதத்தில் சிறீதரன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 07

**ஈழத் தமிழ் மக்களுக்கென அர்த்தமுள்ளதும் - அடிபணியாத துமான சமஷ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத் தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும். இதுவே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பு. - இவ்வாறு இந்திய பிரதமராக மூன்றாவது முறையாக ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்து செய்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.**

- நரேந்திர மோடிக்கு சிறீதரன் எம். பி. அனுப்பிவைத்துள்ள வாழ்த்துக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டவை வருமாறு,

"தாங்கள் இந்திய மக்களின் மன உணர்வுகளை வென்றிருப்பதன் பிரதிபலிப்பாகவே மக்களவைத் தேர்தலில் பெற்றிருக்கும் இந்த வெற்றி அமைந்திருக்கிறது. பாரதத்தின் அரசியல், பொருளாதார, சமூக நலன் சார்ந்து தாங்கள் ஆற்றவிருக்கும் பணிகளின் விளிம்பில் ஈழத் தமிழர்களுக்கும் இந்திய தேசத்துக்கும் இடையே இழையோடியிருக்கும் உறவின் கனதியை உயிர்ப்பிக்க வேண்டிய காலக் கடமையும் தங்களிடத்தே தரப்பட்டிருப்பதாக நாம்

11

## ஜூலை முதலாம் திகதி முதல் மின்சார கட்டணம் குறையும்!

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் மின்சார கட்டணம் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித் துள்ளார்.

மின்சார திருத்த சட்டமூலத்தை நேற்று வியாழக் கிழமை பாராளுமன்றில் முன்வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்கான முன்மொழிவு நாளை (இன்று) அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை பொது

11

## யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் அராஜகங்கள் அதிகரித்துள்ளன!

### கஜேந்திரன் எம். பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

யாழ்ப்பாணத்தில் - வடக்கு, கிழக்கில் பொலிஸாரின் அராஜகங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளன. குற்றங்களில் ஈடுபடும் பொலிஸார்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இது விடயத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலையிட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

11

## நயினை அம்மனுக்கு இன்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 07

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் 7ஆம் திருவிழாவான எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு கைலாய வாகனத் திருவிழா நடைபெறும்.

11

## சிறீதரன் எம். பி. சுவிஸ் பயணம்

கிளிநொச்சி, ஜூன் 07

தமிழ் தொழில் முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் உலகளாவிய 13ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுவிற்சர்லாந்து பயணமானார்.

தமிழர்களின் எதிர்கால பொருளாதாரம்

11

## மின்சார சபை திருத்த சட்டமூலம் 44 வாக்குகளால் நிறைவேறியது!

### முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 07

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் மின்சார சபை திருத்த சட்ட மூலம் 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய கட்சிகள், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் உட்பட 62 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

உத்தேச மின்சார சபை சட்ட மூலத்தில் 54 ஏற்பாடுகள் உள்ளன. இவற்றில் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானவை. அவற்றை நிறைவேற்றவேண்டும் என்றால் விசேட பெரும்பான்மை அவசியம் என்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எனவே, இதனை அரசாங்கம் நிறைவேற்றக் கூடாது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

எனினும், முன்னர் அறிவித்தபடி நேற்று வியாழக்கிழமை காலை சட்டமூலம் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்பட்டது. விவாதத்தை நடத்த வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள்

11

## போர் குற்றவாளிகள் தொடர்பில் சாட்சி கோரும் பிரிட்டன் பொலிஸ்!

லண்டன், ஜூன் 07

யாழ்ப்பாணத்தில் 20 வருடங்களுக்கு முன்னர் தேர்தல் பிரசாரத்தின்போது பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் ம. நிமலராஜன் கொலை தொடர்பில் பிரிட்டன் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார் சாட்சியம் அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் - போர் நடந்தவேளை இடம்பெற்ற இந்த போர் குற்றங்கள்

11

## மின்சார பாவனையாளரிடமிருந்து 12,000 ரூபாய் மேலதிகமாக அறவீடு

### சம்பிக்க ரணவக்க எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 07

இலங்கை மின்சார சபை கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் மாத்திரம் 9 ஆயிரம் கோடி ரூபாய் மேலதிக வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்தக் காலப்பகுதியில் மின்சார பாவனையாளர்களிடமிருந்து மேலதிகமாக 12 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளது. மின் கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் - என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை நடந்த மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில்



உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், மின்சார சபையை 12 கூறுகளாகப் பிரித்து அவற்றைத் தனியார் தரப்பினருக்கு வழங்கும் இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் குறித்து விசேட கவனம் செலுத்த

11

## ஸ்ரார்லிங் சேவைக்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 07

நாட்டில் செய்மதி இணைய சேவையை ஆரம்பிக்க எலான் மஸ்கின் ஸ்ரார்லிங் நிறுவனத்துக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தை மேற்கோள்காட்டி ஜனாதிபதி

11

## ரணிலை ஆதரிப்பதற்கு ஆட்சேபனை இல்லை!

### சுதந்திர கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அவருக்கு ஆதரவளிப்பதில் கட்சிக்குள் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என சிறீலங்கா சுதந்திர கட்சியின் பதில் பொதுச் செயலாளர் நாயகம் துமிந்த திஸநாயக்க தெரிவித் துள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கொழும்பில் பல தலைமுறைகளாக வாழ்ந்துவருபவர் அவர். நீண்டகாலமாக அவரோடு தொடர்பு இருந்தபோதிலும் அண்மையில்தான் அவரின் இல்லத்துக்கு சென்று அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

கொழும்பில் கறுவாக்காடு என்று சொல்லப்படுகின்ற உயர் அடுக்கு மக்கள் மாத்திரமே வாழ்கின்ற அந்தப் பகுதியில் இரண்டு ஏக்கர் காணியில் அமைந்துள்ள அவரின் தலைமுறையினர் வாழ்ந்த அந்த பழைய வீட்டுக்குள் போனபோது பிரமிப்பை ஏற்படுத்தியது.

வீட்டின் வளவுக்குள் பின் பகுதியில் பசு மாடுகள் மூன்று வளர்க்கப்படும் அந்த பகுதி வரை அழைத்துச் சென்று காண்பித்தார். அவரோடு நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கூறிய பல விடயங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

அவரின் அந்த வீடு இருக்கும் பகுதியில்தான் அநேகமாக பல மேலைநாடுகளின் தூதரகங்கள் இருக்கின்றமையாலும் - அவரும் ஏதோ ஒருவகையில் அரசியலுடனும் அதிகாரத்தில் உள்ளவர்களுடனும் சம்பந்தப்பட்டவர் என்பதாலும் எல்லா தூதுவர்களையும் நன்கு அறிந்தவராகவும் - பலரோடு நெருங்கிப் பழகியவராகவும் இருந்தார்.

இதனால் அந்தத் தூதரகங்களின் கொண்டாட்டங்களுக்கும் இவர் அடிக்கடி அழைக்கப்படுவது உண்டாம்.

ஒரு தடவை சுவிஸ் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த வைபவம் ஒன்றுக்கு இவர் சென்றிருந்த போது நடந்த சம்பவம் ஒன்றை அவர் விவரித்தார். அந்த வைபவத்தின்போது, சுவிஸ் தூதுவரோடு நமது தமிழ் தலைவர் ஒருவர் அருகருகே அமர்ந்திருந்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். இதனை அவதானித்த அவர், பின்னர் சுவிஸ் தூதுவரை எதிரே கண்டபோது, "தலைவர் என்ன சொல்கிறார்?" என்று நகைச்சுவையாகக் கேட்க, அதற்கு சுவிஸ் தூதுவரோ அவரை வானளாவப் புகழ்ந்துவிட்டு, தமது நாட்டுக்கு சென்று அங்குள்ள கன்ரன் அமைப்பு முறைபற்றி அறிந்துவர ஆசைப்படுவதாக கூறியதாக இவரிடம் சொல்லியிருக்கிறார். சுவிஸ் நாடு மிகச் சிறிய நாடு என்றாலும் அவர்களின் ஆட்சிமுறை ஒரு சமஷ்டி கட்டமைப்பு போன்றதுதான். ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என்று அழைக்கப்படும் அந்த நாடு சிறிய நாடு என்றாலும் இருபத்தியாறு மாநிலங்களை காண்ட (கன்ரன்) கூட்டாட்சி குடியரசு நாடு. அந்த நாட்டுக்கு சென்று, அதன் ஆட்சி முறை பற்றி அறிந்துவர நமது தலைவர் ஒருவர் விரும்பியபோது அதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க சுவிஸ் தூதரகம் முன்வந்திருக்கின்றது.

இவரும் அதுபற்றி அறிந்ததும் மகிழ்ச்சியடைந்திருக்கின்றார். நமது தலைவர் ஒருவர் இப்படி வெளிநாடு சென்று அங்குள்ள ஆட்சி முறைகளை அறிந்துவர விரும்புவது வரவேற்கக்கூடியதுதானே.

இந்த சம்பவம் நடந்து அடுத்த ஆண்டும் சுவிஸ் தூதரகத்தின் வைபவம் ஒன்றுக்கு இவர் சென்றிருந்தபோது அப்போதும் அந்தத் தலைவர் அங்கு வந்திருந்தாராம். அவரைக் கண்டதும், இவர் தூதுவரிடம் கடந்த ஆண்டு நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தி, "என்ன நடந்தது? தலைவர் சுவிஸ் போய்வந்தாரா?" என்று கேட்க, தூதுவர் சொன்ன பதில் இவருக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கின்றது.

சுவிஸின் ஆட்சி முறையை அறிந்துவர, அந்தத் தலைவரின் மகளும் மகனும் போய்வந்திருக்கின்றனர்.

இனி இந்தப் பத்தியில் எழுத வந்த விடயத்துக்கு வருகின்றேன்.

"ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற மூலோபாயம் பயனற்றது. தென்னிலங்கையில் உள்ள தலைவர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்தே இறுதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்", என்று தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா. சம்பந்தன் கூறியதாக ஒரு செய்தி நேற்றைய ஈழநாடுவில் வெளிவந்திருந்ததை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். தன்னை சந்திக்க வந்த ஐரோப்பிய தூதுக்குழுவினரிடமே சம்பந்தன் ஐயா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அதாவது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் ஒரு வேட்பாளரை களம் இறக்கி, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்று முன்வைக்கப்படும் யோசனை மூலோபாயம் பயனற்றது என்றிருக்கிறார் சம்பந்தன் ஐயா. கடந்த பதினைந்து வருடங்களாக அவரின் மூலோபாயம் தமிழ் மக்களுக்கு பயனைத்தரும் என்று நம்பியவர்கள் தமிழ் மக்கள். அந்த நம்பிக்கை வீண்போன பின்னர்தான், அவர்கள் இந்த முடிவுக்கு வந்தார்கள் என்பதைக்கூட சம்பந்தன் ஐயா இன்னமும் உணர்வதாக தெரியவில்லை.

ஆனாலும்கூட அவரின் இந்தக் கோரிக்கை ஒரு வகையில் மகிழ்ச்சிக்கு உரியதுதான். சில மாதங்களுக்கு முன்னர், அவரின் அரசியல் மாணவனும், மற்றுமொரு தமிழ் அரசு எம்.பியுமான எம். ஏ. சுமந்திரன், ஐயா செயல்பட முடியாதவராக இருப்பதாகவும் அவர் பேசுவதை புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்போது சில வாரங்களாக அவர் பொது வேட்பாளர் பற்றி அடிக்கடி பேசியும் தான் சந்திக்கின்ற இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் அளவுக்கும் உடல்நலம் தேறியிருப்பது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான்.

ஊர்க்குருவி.

## றோயல்பார்க் கொலையாளிக்கு
# மைத்திரியின் பொதுமன்னிப்பை இரத்துச் செய்தது உயர்நீதிமன்றம்

கொழும்பு, ஜுன் 07

றோயல்பார்க் கொலைக் குற்றவாளிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொது மன்னிப்பை உயர்நீதிமன்றம் இரத்துச்செய்துள்ளது.

றோயல்பார்க் கொலையாளி டொன் சமந்த ஜீட் அந்தனி ஜயமஹவுக்கு ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொது மன்னிப்பு தன்னிச்சையானது, சட்டத்தின் கீழ் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பு விதிகளை பின்பற்றாமைக்காக றோயல் பார்க் கொலையாளிக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்புகளை நீக்குமாறு மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம் உத்தரவிட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன மேற்படி பிரதிவாதிக்கு பொதுமன்னிப்பை வழங்கிய வேளை மனுதாரரின் அடிப்படை உரிமைகளையும் பொது நம்பிக்கை கோட்பாட்டையும் மீறியுள்ளார் என நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

றோயல்பார்க் கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் தீர்மானத்தின் சட்டபூர்வமான தன்மையை எதிர்த்து பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டு அமைப்பு இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

இந்தத் தீர்ப்பை கருத்தில் கொண்டு, குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சட்ட ரீதியாகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

# எச். ஐ. வியால் 207 பேர் பாதிப்பு 2024இல் 25 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 07

2024 முதலாவது காலாண்டில் 207 பேர் எச். ஐ. வி. நோயால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 13 பேர் உயிரிழந்ததாக தேசிய பால் வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இது 165 பேர் எச். ஐ. வி. நோயினால் பாதிக்கப்பட்டிருந்த கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 25 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது.

இதன்படி, இந்த ஆண்டின் முதலாவது காலாண்டில் பதிவான நோயாளர்களில் 23 ஆண்களும், ஐந்து பெண்களும் 15 - 24 வயதுக்கு உட்பட்டவர்களாவர். எஞ்சியவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

எச். ஐ. வி. ஆண் மற்றும் பெண் நோயாளர்களின் விகிதம் 7 : 1 ஆக உள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு 43 எச். ஐ. வி. நோயாளிகள் உயிரிழந்தனர்.

இது குறித்து தேசிய பால் வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் வினோ தர்மகுலசிங்க கூறுகையில்,

2018 ஆம் ஆண்டிலிருந்து எச். ஐ. வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

பரிசோதனை திறன் விரிவாக்கம், பாலியல் கல்வி மற்றும் ஆபத்தான பாலுறவு நடத்தை குறித்து மக்களிடையே கல்வி அறிவு இன்மை, அறிவு மற்றும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காதது தொற்றாளர்கள் அதிகரிப்புக்கு காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் மன்றில்
ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை
பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்

அறிவோர் ஒன்றுகூடும் அரசியற் கருத்துக் களம்
இடம் : தந்தை செல்வா கேட்போர்கூடம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
காலம்: 2024.06.09, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 2 மணி 59 நிமிடம்
அகவணக்கம்
சுடர்ச்சுடரேற்றல்
வரவேற்புரை
திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
தலைமையுரை
கௌரவ சி.வி.கே. சிவஞானம்
(பேரவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
தொடக்கவுரை
பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன்
(சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கருத்துரைகள்
சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்
(முன்னாள் அமைச்சர், வடக்கு மாகாண சபை)
திரு. சபாபதி சுப்பையா குகநாதன்
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)
ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
நிறைவுரை
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நன்றியுரை
திரு. இம்மானுவல் தயாளன்
(சமூக செயற்பாட்டாளர்)
நிகழ்ச்சித் தொகுப்பு
சட்டத்தரணி கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
07.06.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் - தீர்மானமொன்றின் பயன்பாடு குறித்து?

மேற்குலக இராஜதந்திர தரப்புகள் சந்திக்கும்போதுதான் சம்பந்தன் இப்போதும் அரசியலில் இருக்கின்றார் என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடிகின்றது. தமிழ் பொது வேட்பாளர் பயனற்ற ஒன்று என்று ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவிடம் சம்பந்தன் தெரிவித்தாரென செய்திகள் வெளியாகிருக்கின்றன. இவ்வாறான சந்திப்புகளின்போது எவ்வாறான விடயங்கள் பரிமாறப்பட்டன - என்பதை இராஜதந்திரிகள் ஊடகங்களிடம் கூறுவதில்லை.

சம்பந்தனிடமிருந்தோ அல்லது சந்திப்பில் பங்குகொண்ட ஏனையவர்கள் எவரிடமோ இருந்துதான் இவ்வாறான செய்திகள் வெளியாகின்றன. இவ்வாறான செய்திகளில் எந்தளவு உண்மை இருக்கின்றது என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு, ஓர் அரசியல் நிலைப்பாட்டால் பயனிருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை எந்த அடிப்படையில் முன்கூட்டியே தீர்மானிக்க முடியும்? சம்பந்தன் கடந்த பதினைந்து வருடங்களில் மேற்கொண்ட அரசியல் தீர்மானங்களால் எவ்வாறான பயன்பாடுகள் கிடைத்திருக்கின்றன?

ஓர் அரசியல் நிலைப்பாட்டால் உடனடி பயன்பாடுகளும் இருக்கின்றன - நீண்டகால பயன்பாடுகளும் இருக்கின்றன - சில வேளைகளில் மறைந்திருக்கும் பயன்பாடுகளும் இருக்கின்றன. அது என்ன மறைந்திருக்கும் பயன்பாடு என்று ஒரு கேள்வி எழலாம். அதாவது, ஒரு சில அரசியல் தீர்மானங்களின் பயன்பாடு எதிர்காலத்தில் அமையப் போகும் - எதிர்பாராத அரசியல் சூழ்நிலைகளால் தீர்மானிக்கப்படலாம். அவ்வாறான சூழ்நிலை எப்போது அமையுமென்று இப்போதைக்கு கணிக்க முடியாது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றிபெறுமாக இருந்தால் அதன் பயன்பாட்டை இப்படித்தான் என்று திட்டவட்டமாக வரையறுக்க முடியாது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடானது - உடனடியாக சிதறிப்போயிருக்கும் - சிதறிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களை ஓரணிப்படுத்த பயன்படும். அதேவேளை அடுத்து நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தை ஓரிடத்தை நோக்கி திரள செய்வதற்கு பயன்படலாம். தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக சிதறியமைக்கு சம்பந்தனும் அவரின் சீடர்கள் மட்டுமே காரணமாவர்.

சம்பந்தன் தனது சுயநல அரசிலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சிதைத்து இறுதியில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் எதிர்காலத்தையும் சீரழித்திருக்கின்றார். இவ்வாறான ஒருவர் அரசியல் தீர்மானங்களின் பயன்பாடு குறித்து பேசுவது அடிப்படையிலேயே தவறானதாகும். அரசியலில் வெற்றி பெற்றவர்களே மற்றவர்களது தீர்மானங்களின் பயன்பாடு தொடர்பில் கேள்வியெழுப்பும் தகுதியுடையவர்களாவர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் பயன்பாடு குறித்து பேசுவதற்கான தகுதிநிலையில் சம்பந்தன் இல்லை என்பதே உண்மை.

2015 ஆட்சி மாற்றம் ஒப்பீட்டடிப்படையில் சில வாய்ப்புகளை வழங்கியிருந்தது. ஆனால், அவற்றை சம்பந்தன் வீணாக்கினார். வரமுடியாத அரசியல் யாப்பு ஒன்றை காண்பித்து தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். இதற்கு பதிலாக அரசமைப்பில் இருப்பவற்றை அமுல்படுத்துவதிலிருந்து, முன்னோக்கி பயணித்திருக்கலாம். ஆனால், சம்பந்தன் அதற்கான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. சம்பந்தனின் அணுகுமுறை பயனற்றது என்பது அன்றைய சூழலில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால், அவற்றுக்கு சம்பந்தன் செவிசாய்க்கவில்லை. அதே சம்பந்தன்தான் தமிழ் பொது வேட்பாளரின் பயன்பாடு தொடர்பில் பேசுகின்றார்.

# வடக்கு, கிழக்கு, மலையக மாணவர்களுக்காக கல்வியியலாளர்கள் ஒன்றிணைய வேண்டும்

## ஆறு. திருமுருகன் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 07

வடக்கு - கிழக்கு - மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சி கல்வியலாளர்கள் ஒன்றிணைய வேண்டும். வடக்கின் க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவுகள் மனதுக்கு நிம்மதி தருகிறது என்று கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறு தொடர்பில் செய்தியாளர்கள் அவரை கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கில் கல்வி பெறுபேறு அதிகரித்துள்ளமை பாராட்டத்தக்கது. அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறு வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் மனதுக்கு திருப்தி தருகின்றது. இந்த முயற்சிகளை எடுத்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாராட்டுகள்.

வடக்கின் கல்வி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதிலும் இவற்றைப் பொருட்படுத்தாது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுத்து ஆர்வம் காட்டியமை பாராட்டத்தக்கது.

இன்று மலையக மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றார்கள் இந்த மாணவர்களின் விஞ்ஞான துறை வளர்ச்சிக்கு முறையான திட்டமிடல்களை மேற்கொண்டு அவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற கல்வித்துறை சார்ந்தவர்கள் உழைக்கவேண்டும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணம், மலையக கல்வி அபிவிருத்தி தொடர்பாக கூட்டுப் பொறுப்பாக கல்வி சார்ந்த அறிஞர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் ஒன்றிணைந்து மாதிரி பரீட்சை வினாத்தாள்களை புலமை வாய்ந்தவர்கள் தயாரித்து அச்சிட்டு நிறுவனங்கள் அவற்றை இலவசமாக வழங்கி தமிழ் மாணவர்களின் கல்விக்கு அபிவிருத்திக்கு உதவி செய்ய வேண்டும்.

சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக விண்ணப்பங்கள் அனுப்புவது தொடர்பில் பல்கலைக்கழக கல்வியாளர்கள் எவ்வாறு விண்ணப்பிப்பது தயாரிப்பது என்பது தொடர்பில் விளக்கங்களை விளங்கி பயனடைய செய்வதற்கான தெளிவுபடுத்தல்களை முறையாக செய்யவேண்டும்.

வடக்கு - கிழக்கு - மலையக கல்வியாளர்கள் ஒன்றிணைந்து தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து செயல்படுத்துவதற்கு திட்டமிடல்களை செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 07


மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமைகள் செயல்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகளாரின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

புனித மரியாள் தேவாலயத்தில் அமைந்துள்ள அன்னாரின் சமாதியில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்பட்ட ஆயுதக்குழுவால் அருட் தந்தை சந்திரா பெரனாண்டோ சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 07 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 25
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அமாவாசை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம், பொருள் ,ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். வாகன வசதிப் பெருகும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

# பா. ஜ. க. கூட்டணியிலிருந்து அ. தி. மு. க. வெளியேற அண்ணாமலையே காரணம்!

## முன்னாள் அமைச்சர் வேலுமணி

கோவை, ஜூன் 07

“அ. தி. மு. கவின் இரண்டாம் கட்ட தலைவர்கள் எல்லாம் அதிகமாக பேசினரென அண்ணாமலை கூறியுள்ளார். ஆனால், அதிகமாக பேசியதே, அவர் தான். பா. ஜ. க. கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. விலகி வந்ததற்கு அண்ணாமலைதான் காரணம்” என்று அ. தி. மு. க முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி கூறியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், “பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை அ. தி. மு. க. குறித்து நேற்று (நேற்றுமுன்தினம்) கொஞ்சம் அதிகமாகவே பேசியிருக்கிறார். அப்படியெல்லாம் பேசக்கூடாது. தேர்தலில் வெற்றி, தோல்வி சகஜம். மேலும், அண்ணாமலை அ. தி. மு. கவின் இரண்டாம் கட்ட தலைவர்கள் எல்லாம் அதிகமாக பேசினர் என்றும் அண்ணாமலை கூறியுள்ளார்.

ஆனால், அதிகமாக பேசியதே, அண்ணாமலைதான். பா. ஜ. க. கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. விலகி வந்தமைக்கு அண்ணாமலைதான் காரணம் . இதே கூட்டணி நீடித்திருந்தால், இன்று 30-35 இடங்களில் வெற்றி பெற்றிருப்பதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கும். ஆனால், அதெல்லாம் செய்துவிட்டு இன்று மீண்டும் வந்து அ. தி. மு. கவை அண்ணாமலை விமர்சிக்க வேண்டிய அவசியம் கிடையாது. அ. தி. மு. கவுக்கு எதிரான தவறான பிரசாரங்களைத் தாண்டி, கடந்த தேர்தலைவிட, இந்த முறை அதிகமாகவே வாக்குகளைப் பெற்றுள்ளோம்.

கோவையில், ஏற்கெனவே பா. ஜ. க. சார்பில் போட்டியிட்ட சி.பி.ராதாகிருஷ்ணனை விட, அண்ணாமலை குறைவான வாக்குகளைத் தான் வாங்கியிருக்கிறார். நான் எங்களது கட்சி குறித்து என்ன வேண்டும் என்றாலும் பேசுவேன். அதேநேரம் அண்ணாமலை குறித்து நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதிலளித்திருக்கிறேன். எனவே, அதற்காக பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. கண்டிப்பாக, 2026-ல் அ. தி. மு. க. வெற்றி பெறும். எடப்பாடி பழனிசாமி முதல்வராக வருவார்” என்றார். (ஐ)

# கரும்பு விவசாயி சின்னத்துக்கு 79 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன!

சென்னை, ஜூன் 07

மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வழங்க மறுக்கப்பட்ட கரும்பு விவசாயி சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 79 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றுள்ளனர்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிட்டது. இந்த முறை அவர்களின் விருப்ப சின்னமான கரும்பு விவசாயி மறுக்கப்பட்டதால், மைக் சின்னத்தில் களம் இறங்கியது நாம் தமிழர். கரும்பு விவசாயி சின்னமானது வேறு மாநில கட்சியான பாரதிய மக்கள் ஐக்கிய கட்சிக்கும், வேறு சில சுயேச்சை வேட்பாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி தோல்வி அடைந்திருந்தாலும், 8.16 வாக்கு சதவீத வாக்குகளுடன் மாநில கட்சிக்கான அங்கீகாரத்தை பெற்று கவனம் ஈர்த்துள்ளது.

இதேசமயம் நாம் தமிழர் கட்சியின் கரும்பு விவசாயி சின்னத்தில் போட்டியிட்ட பாரதிய மக்கள் ஐக்கிய கட்சி வேட்பாளர்கள் 79 ஆயிரத்து 203 வாக்குகள் விழுந்துள்ளன.

இந்த முடிவுகளைப் பார்த்துவிட்டு, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய 79 ஆயிரம் வாக்குகள் சின்னம் பிரச்னையால் இப்படி வழிமாறிப் போய்விட்டன என்று நாம் தமிழர் கட்சியினர் ஆதங்கம் தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# விருதுநகரில் விஜயபிரபாகரன் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார்!

## பிரேமலதா விஜயகாந்த் சாடல்

சென்னை, ஜூன் 07

“விருதுநகரில் விஜயபிரபாகரன் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டுள்ளார். வீழ்ச்சியடையவில்லை, வீழ்த்தப்பட்டிருக்கிறார். இதுதான் உண்மை.” என்று தே. மு தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், விருதுநகரில் மறு வாக்கு எண்ணிக்கை கோரி தேர்தல் ஆணையத்தில் முறையிட்டுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்த பேட்டியில், “விருதுநகரில் விஜயபிரபாகரன் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டுள்ளார். கப்டன் இல்லாத சோகம் இன்னும் எங்களை விட்டு நீங்கவில்லை. கப்டன் நினைவில் இருந்து மீளவில்லை என்பதால் விஜயபிரபாகரன் தேர்தலில் நிற்கவில்லை என்றுதான் முதலில் கூறினார். நிர்வாகிகளின் அன்புக் கட்டளையை ஏற்றே விருதுநகரில் போட்டியிட்டார். தேர்தலில் கடைசிவரை அவர் தனது முயற்சியை கைவிடவில்லை.

விஜய பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டுள்ளார் என்று ஏன் கூறுகிறேன் என்றால், சூழ்ச்சியால் அவர் வீழ்த்தப்பட்டுள்ளார். அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது. வாக்கு எண்ணிக்கையின்போது வாக்கு எண்ணும் மையத்தில் சொல்லப்பட்ட அறிவிப்புகளுக்கும், ஊடகங்களில் சொல்லப்பட்ட அறிவிப்புகளுக்கும் ஏகப்பட்ட முரண்பாடுகள் இருந்தன. வாக்கு எண்ணும் மையத்தில் பல முறைகேடுகள் நடந்ததாக அங்கிருக்கும் அதிகாரிகளே சொல்கிறார்கள்.

தேர்தல் முடிவு அறிவிக்கும் முன்னதாகவே, முதல்வர் 40 தொகுதிகளிலும் தி. மு. க. கூட்டணி வென்றது என்கிறார். முதல்வர் அறிவிக்கும் முன்னர் 4 தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்துகொண்டுதான் இருந்தது. எதனை வைத்து முன்கூட்டியே வென்றுவிட்டோம் எனக் கூறினார் என்பதை முதல்வர் ஸ்டாலின் விளக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தேர்தல் நடத்தை விதி நிறைவுக்கு வந்தது

சென்னை, ஜூன் 07

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் கடந்த மார்ச் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த தேர்தல் நடத்தை விதிகள் நேற்றுடன் விலக்கப்பட்டது.

இந்தியாவின் 18ஆவது மக்களவைக்கான பொதுத் தேர்தல் அறிவிப்பு கடந்த மார்ச் 16ஆம் திகதி வெளியானது. அன்றிலிருந்து தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்தன.

தேர்தல் முடிவுகள் கடந்த 4ஆம் திகதி வெளியாகின. இதைத் தொடர்ந்தே தேர்தல் நடத்தை விதிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களின் ஆதரவு ரணிலுக்கே!

## கூறுகிறார் அகிலவிராஜ் காரியவசம்



கொழும்பு, ஜூன் 07

**தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

யார் என்ன சொன்னாலும் தமிழ் பேசும் மக்களின் வாக்கு களில் பெரும்பாலான விகிதம் ரணில் விக்கிமசிங்கவுக்கே விழும். அதுமட்டுமல்ல சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குரிய 69 லட்சம் வாக்கு வங்கியிலும் பெரும்பாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வரும் என உறுதியாக நம்புகின் றேன்.

இன்னும் தேர்தல் அறிவிக் கப்படவில்லை. ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரம்கூட இன்னும் ஆரம்பமாகவில்லை. அவ்வாறு ஆரம்பிக்கப்படும்போது எமது பலம் தெரியவரும்-என்றார்.

# உலக தரவரிசைப் பட்டியலில் கொழும்பு பல்கலை சாதனை!

கொழும்பு, ஜூன் 07

முதல்முறையாக கொழும் புப் பல்கலைக்கழகம் உலகின் 1,000 சிறந்த பல்கலைக்கழகங் களிற்குள் இடம்பிடித்துள்ளது.

உலக பல்கலைக்கழக தரவ ரிசையில் இந்த ஆண்டு கொழும் புப் பல்கலைக்கழகம் 951ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

குறித்த தகவலை துணை வேந்தர் மூத்த பேராசிரியர் எச். டி.கருணாரத்ன தெரிவித்துள் ளார்.

இலங்கையின் மிகப் பழமை யான பல்கலைக்கழகம் மற்றும் அதிக மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகம் என்ற சாத னையையும் கொழும்புப் பல்க லைக்கழகம் தனதாக்கியுள்ளது. (அ)

## வெள்ளத்தில் அள்ளுண்ட மாணவனின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூன் 07

ஹொரணை பகுதியில் வெள் ளத்தில் சிக்கி காணாமல் போயி ருந்த பாடசாலை மாணவர் ஒரு வரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

அங்குருவத் தோட்டப் பகு தியில் 17 வயதுடைய குறித்த பாடசாலை மாணவர் வெள்ளத் தில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸாரால் தேடப் பட்டு வந்தார்.

எவ்வாறாயினும் அவரது சடலம் நேற்று முன்தினம் மீட் கப்பட்டதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனை களுக்காக ஹொரணை வைத்தி யசாலையில் வைக்கப்பட்டுள் ளது. (அ)

மன்னார் நீதிமன்று மீதான தாக்குதல்

# நேற்று வழங்கப்பட இருந்த தீர்ப்பு ஜூலை 18 ஆம் திகதி ஒத்திவைப்பு

மன்னார், ஜூன் 07

கடந்த 2013 ஆம் ஆண்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத் தின் மீது தாக்குதல் நடத்தி தீ வைத்தமை தொடர்பான வழக் கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட இருந்த நிலையில் வழக்கு தொடுநர் தரப்பு எழுத்து மூல சமர்ப்பணம் வழங்க மன்றில் கால அவகாரம் கோரியமையி னால் இந்த மாதம் 20ஆம் திக திக்குள் எழுத்துமூல சமர்ப்ப ணம் வழங்க கால அவகாசம் வழங்கப்பட்டதோடு வழக்கின் தீர்ப்பு ஜூலை மாதம் 18 ஆம் திகதி வழங்கப்படும் என திகதி யிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கடந்த 11 வரு டங்களாக நடைபெற்று வந்த நிலையில் விளக்கம் யாவும் நிறைவடைந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக திகதியிடப் பட்டிருந்தது.

இந்த வழக்கின் வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியங்கள் யாவும் இவ்வாண்டு மார்ச் மாதம் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள்ளாகவே எதிரிகள் தரப்பு சாட்சியங்களுக்காக தவணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் எதிரிகள் தரப் பில் 50 பேரின் கூண்டுக்கூற்றுக் களும் இருவரின் சாட்சியமும் ஒரே நாளிலேயே பதிவு செய் யப்பட்டதோடு விளக்கமும் முடிவுறுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே இவ் வழக்கின் தீர்ப்பு நேற்று வழங் கப்பட இருந்தமை பரபரப்பை யும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத் தியிருந்த நிலையில் ஜூலை மாதம் 18ஆம் திகதிக்கு திகதியி டப்பட்டுள்ளது. (அ)

# சம்பந்தமில்லாமல் பேசிய கல்வி ராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஜூன் 07

நாடெங்கிலுமுள்ள அரச பல் கலைக்கழகங்களில் தொடர்ச்சி யாக இடம்பெற்று வரும் போதனை சாரா ஊழியர்களின் போராட்டம் குறித்து கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் இராகவன் பாராளுமன் றத்தில் தெரிவித்த கருத்து பல்க லைக்கழக ஊழியர்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியி ருக்கிறது.

2016 ஆம் ஆண்டிலிருந்து தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடர்காலக் கொடுப் பனவு மற்றும் சம்பள ஏற்றங் களை உறுதிப்படுத்தக்கோரி, நாட்டிலுள்ள 17 பல்கலைக்கழ கங்களிலும் பணியாற்றும் போதனை சாரா ஊழியர்கள் கடந்த மே மாதம் 2 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இத னால் பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் முடங்கிப் போயிருக் கின்றன.

இந்தப் போராட்டம் குறித் தும், இதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் கடந்த 04ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற் றிய சமயத்தில், கல்வி இரா ஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் இராகவன் குறுக்கிட்டு, "கல்வி சாரா ஊழியர்களின் பிரச்னை குறித்து நான் தொடர்ச் சியாக அந்த தரப்பினர்களுடன் பேசி வருகிறேன். போராட்டக் காரர்களுக்குத் தீர்வைக் கொடுப் பதற்கு தயாராக இருக்கிறோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெளிநாட்டில் நிற்கிறார். அவர் வந்ததும் தீர்வு தரப்படும்" என்று தெரிவித்தி ருந்தார்.


அவரது கருத்து விடயப் பொருத்தப்பாடு இல்லாத ஒன்று என்றும், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கும், பல்கலைக் கழகமொன்றின் துணைவேந்தர் வெளிநாடு சென்றதற்கும் என்ன சம்பந்தம் என்றும் போராட்டத் தில் ஈடுபட்டுள்ள யாழ். பல்க லைக்கழகத் தொழிற் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்டம் பற்றியோ அதன் தார்ப்பரியங் கள் பற்றியோ அடிப்படை விட யத்தைக் கூடத் தெரியாதவர் போல நடந்து கொள்ளும் கல்வி இராஜாங்க அமைச்சரிடமிருந்து நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

என்ற நம்பிக்கை தமக்குத் துளி கூட இல்லை என்று கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஊழியரொருவர் குறிப்பிட்டுள் ளார். (அ)

# காலநிலை மாற்றங்கள் குறித்து தேசிய வேலைத்திட்டம் தேவை

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 07

காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு குறைந்த வரு மானம் ஈட்டும் நாடுகள், அபிவி ருத்தி கண்ட நாடுகளுக்கு அழுத் தம் கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் உலக சுற்றா டல் தின நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி-

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மே 30 ஆம் திகதி முதல் தேசிய சுற்றாடல் வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது டன், நாட்டில் காடுகளின் எண் ணிக்கையை அதிகரிப்பதற்காக நாடளாவிய ரீதியில் பல விஷேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

சில அபிவிருத்தியடைந்த நாடுகள் காலநிலை மாற்றத் திற்கு எதிராக பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி வருகின் றன.

அந்த இலக்கை அடைய இந்தியா, சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகள் கால அவகா சம் தேவை என்று கூறியுள்ளன.

மேலும் பெற்றோலிய உற்பத்தி செய்யும் நாடுகளும் உள்ளன.

இவற்றுக்கு மத்தியில் இலங்கை போன்ற சிறிய நாடு கள் காலநிலை மாற்றத்தை எதிர் கொள்வதில் சிக்கித் தவிக்கின் றன.

அதற்கு நாம் இப்போது புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பாக நிதி அமைச்சில் தனிப் பிரிவை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள் ளோம்.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன் சுற்றுச்சூழல் கொள்கைகளும் கிராமத்திற்கு செல்கிறது. எனவே இந்த வேலைத்திட்டத்தை தேசிய அளவில் செயல்படுத்துவோம்.

இங்கு ஒரு முக்கிய விடய மாக காலநிலை மாற்றம் தொடர் பான பல்கலைக்கழகத்தை நிறுவ நாம் நடவடிக்கை எடுத் துள்ளோம்.

அந்தப் பணிகள் முடிந்ததும், அடுத்த ஆண்டு ஜூன் மாதத் திற்கு முன் அதனை சட்டபூர்வ மாக்க எதிர்பார்க்கின்றோம்.

காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுப்பது தொடர்பான சர்வதேச அளவிலான ஆராய்ச் சிக்காக இந்தப் பல்கலைக்கழ கத்தைப் பயன்படுத்த எதிர்பார்த் துள்ளோம்.

மேலும், காலநிலை மாற் றத்தை எதிர்கொள்ளத் தேவை யான நிதியைப் பெறுவதிலும் இன்று சிக்கல்கள் ஏற்பட்டுள் ளது.

அமெரிக்காவும் ஐரோப்பா வும் இந்த ஆண்டு யுக்ரேன் யுத் தத்துக்கு பயன்படுத்திய பணத் தைக் காலநிலை மாற்றத்துக்கு ஈடு கொடுக்க வழங்கியிருந்தால், அந்தப் பணம் இரண்டு ஆண்டு களுக்குப் போதுமானதாக இருந் திருக்கும். ரஷ்யா செலவழித்த பணம் இன்னும் கணக்கிடப்ப டவில்லை.

மேலும், காஸா போருக்குப் பயன்படுத்தப்பட்ட பணமும், அதற்காக அனுப்பப்பட்ட ஆயு தங்களின் செலவையும் இந்த நடவடிக்கைகளுக்கு வழங்கியி ருந்தால், உலகையே மாற்ற முடி யும். ஆனால் இந்தப் பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே, வெப்பமண்டலப் பிரதேசம் என்ற வகையில் எமக் குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்ள வேண் டும்.

அதன்படி, காலநிலை மாற் றம் மற்றும் சுற்றுச்சூழலைக் கையாள்வதில் இலங்கையின் வகிபாகம் பாரம்பரியத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை.

நாம் இன்னும் முன்னோக் கிச் சென்று பொருளாதாரக் கொள்கை மற்றும் வெளியுறவுக் கொள்கையிலும் இதனைச் சேர்க்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரமாக-நீதியாக தேர்தல் நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு!

## பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 07

**எத்தனை தடைகள் ஏற்பட்டாலும் சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு என பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உயர் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, காமினி அமரசேகர, முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியர்சர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நிர்ணயித்தவாறு நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்கப்படாமையால் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளிலிருந்து தப்பிப்பதற்கு அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றம் சுமத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நாடத்துவது தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துடன் எடுக்கப்பட்டவை என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்களில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.



படம்:ஐ.சிவசாந்தன்

# நல்லூர் பெருந்திருவிழா பத்திரிகை யாழ். மாநகர சபையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி பெருங்கோவில் வருடாந்த மகோற்சவபெருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 09ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலயத்துக்கு வெளிச்சுற்றாடல் செயற்பாடுகளை காத்திரமாக முன்னெடுக்கும் யாழ்.மாநகரசபைக்கு நேற்றுக் காலை 10 மணியளவில் மகோற்சவ பத்திரிகையும் காளாஞ்சியும் தேவஸ்தானத்தால் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வையோட்டி யாழ்.மாநகரசபை வாழை, தோரணங்களால் அலங்கரிக்கபட்டிருந்தது. (அ)

# சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட படகு மடக்கிப்பிடிப்பு



முல்லைத்தீவு, ஜூன் 07

முல்லைத்தீவு கடற்பகுதியில் தடை செய்யப்பட்டதொழில் உபகரணங்களை பயன்படுத்தி, பெருமளவான மீன்களை பிடித்துக்கொண்டு சென்ற படகு ஒன்றை முல்லைத்தீவு மீனவர்கள் பிடித்து கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி தொழில்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்துமாறு தொடர்ச்சியாக மீனவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோதும்,

இது தொடர்பில் கடற்படை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும்,

தொடர்ச்சியாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறுவதால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று கொக்கிளாய் பகுதியில் இருந்து மாத்தளன் பகுதிக்குச் சென்று சட்டவிரோத மீன்பிடி ஊடாக அதிகளவான மீன்களைப் பிடித்துக்கொண்டு மீண்டும் கொக்கிளாய் திரும்பிய வழியிலே குறித்த படகை முல்லைத்தீவு மீனவர்கள் வழிமறித்து கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

சுமார் 700 கிலோ வரையான சூடை மீன்கள் படகில் காணப்பட்டுள்ளதுடன், சட்டவிரோதமான முறையில் இந்த மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. அத்துடன் ஒளி பாச்சிகள் (லைட்), பற்றிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கொக்கிளாய் பகுதியை சேர்ந்த கடற்தொழிலாளி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகும் ரணிலின் கட்சி

கொழும்பு, ஜூன் 07

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் தேர்தல்களுக்கு தயாராகி வருகின்ற நிலையில் கட்சியின் முக்கிய நியமனங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இதன்படி தேசிய தேர்தல் அமைப்பாளராக ஹரீன் பெர்னாண்டோவும் தேசிய செயலாளராக ரவி கருணாநாயக்கவும் தேர்தல் பிரதிப் பொதுச் செயலாளராக ரொனால்ட் பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய குறிப்பிடத்தக்க நியமனங்களில், பிர்தௌஸ் பாரூக் கட்சியின் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மிஸ்பா சத்தார் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் கிரிஸான் தியோடர் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் பல மூத்த உறுப்பினர்கள் தங்களின் தற்போதைய பொறுப்புகளில் தொடர்வார்கள் என்பதை கட்சியின் செயற்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தவிசாளர் வஜிர அபேவர்தன, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் கட்சிக்குள் தற்போதுள்ள பதவிகளை தொடர்வார்கள். (அ)

# தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வு

கொழும்பு, ஜூன் 07

தேசிய பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிரப்பப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் கல்வித் துறை தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்- நாட்டில் சுமார் 8,000 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. மாகாண பாடசாலைகளில் காணப்படும் 6,000 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாரிய பின்னடைவு

மேலும், கோவிட் தொற்று காலத்திற்கு பின்னர் அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் நாட்டில் இடம்பெற்ற போராட்டங்கள் காரணமாக 2022ஆம் ஆண்டு கல்வித்துறை உட்பட முழு நாடும் பாரிய பின்னடைவைக் கண்டது.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை நடத்துதல் மற்றும் வினைத்திறன் பரீட்சை வினாத்தாள்கள் திருத்துதல், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் ஆறு மாதத்துக்கும் மேலாக தாமதமடைந்தன.

இவற்றிற்கிடையில், தற்போது தேசிய பாடசாலைகளில் நிலவும் 10,535 ஆசிரிய வெற்றிடங்களை முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைகளை நிரப்புவதன் மூலம் சரி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார். (அ)

# ஓய்வுபெற்ற படையினருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜூன் 07

இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஒரு பகுதியை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்குவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு விருப்பம் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வேலைத்திட்டம் தொடர்பில் முப்படைகளின் அதிகாரிகளுக்கு தெரியப் படுத்துவதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச் சரின் அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதித் தடை காலத்திலும் 44,000 வாகனங்கள் சந்தைக்குள்!

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

**கொழும்பு, ஜூன் 07**

**இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில் 44,430 வாகனங்கள் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அவற்றில் 38,144 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 6,286 கார்கள் உள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.**



உள்ளூர் வாகன உற்பத்தியாளர்கள் குழுவுடன் நிதியமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும், உதிரிபாகங்களை கூட்டுச்செய்து விற்பனை செய்வது தொடர்ந்து நடந்து வருகிறது. இக்கலந்துரையாடலில் பல உள்நாட்டு வாகன உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது குறித்து ஆழமான கலந்துரையாடல் இடம்பெற்றது. இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கும் அதே வேளையில், உள்ளூர் வாகனங்களை கூட்டுச் செய்யும் வணிகங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறக்குமதிக்கு இந்த தடை விதிப்பது உள்ளூர் வாகன உற்பத்தியை ஊக்கம் அளிக்கிறது என்றும், ஒரு நாட்டின் வாகன உற்பத்தியை தொடங்குவது நீண்ட கால செயல்முறை என்றும் அவர்கள் தெரிவித்தனர். உள்ளூர் வர்த்தகங்களை வலுப்படுத்த அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார். (அ)

# பேருந்தில் நட்பாக பழகி வீட்டில் திருடிய பெண்!

கொழும்பு, ஜூன் 07

வாதுவ, மெலேகம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வசித்து வந்த கணவன்-மனைவியின் தங்க நகைகளை பெண் ஒருவர் திருடிச் சென்றுள்ளார்.

பேருந்தில் தற்செயலாக சந்தித்த ஒரு பெண்ணே இவ்வாறு திருட்டியில் ஈடுபட்டுள்ளதாக தம்பதியினர் குறிப்பிட்டுள்ளனர்.

கதிர்காமம் - கொழும்பு பேருந்தில் அண்மையில் தம்பதியினர் அந்த பெண்ணை தற்செயலாக சந்தித்துள்ள நிலையில் நட்பாக பழகியுள்ளார்.

பின்னர் நட்பாக பழகிய பெண், வாதுவ, மெலேகமவில் உள்ள அந்த தம்பதியின் வீட்டிற்கு சென்று, மகனுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறியுள்ளார்.

திருடப்பட்ட வீட்டின் பெண் கூறுகையில்

அவர் இங்கேயும் அங்கேயும் நடந்து தேநீரை குடித்தார். எனது தேநீர் ஆறியதும் ஒரேயடியாகக் குடித்தேன். அப்போது எனக்குக் கொஞ்சம் மயக்கம் வந்தது. அதன் பிறகு எனக்கு என்ன ஆனது என தெரியவில்லை-என்றார்.

பின்னர் சந்தேகநபரான பெண் அந்த தம்பதியரிடம் இருந்து 6 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளை திருடிவிட்டு சாமர்த்தியமாக வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

பின்னர் தம்பதியினர் இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விமல் வீரவன்ஸவுக்கு முக்கிய அமைச்சு பதவி?

கொழும்பு, ஜூன் 07

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு பலம் வாய்ந்த அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு ஊடகம் ஒன்றை மேற்கோள்காட்டி இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் இருவர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க குறித்த இரு உறுப்பினர்களும் ஏற்கனவே தீர்மானித்துள்ளதாகவும் அதற்கு விமல் வீரவன்ஸ இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விமல் வீரவன்ஸ பின்னர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி சுயேச்சையாக செயற்பட்டார்.

அரசாங்கத்திற்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அவர் வெளியேறியிருந்தார். எவ்வாறாயினும், அண்மையில் பிரபல தொழிலதிபர் ஒருவருடன் கூட்டணி ஒன்றையும் ஏற்படுத்தியிருந்தார்.

"சர்வசன அதிகாரம்" என்ற புதிய கூட்டணி கடந்த 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதில் தேசிய சுதந்திர முன்னணி சார்பில் விமல் வீரவன்ஸ, ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பில் டி.வி.டி.திலகசிறி, பிவித்துரு ஹெல உறுமய சார்பில் உதய கம்மன்பில, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜி. வீரசிங்க, யுதுகம தேசிய அமைப்பு சார்பில் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 07

ஒழுக்காற்று விடயத்தில் பல்வேறு முறைகேடுகளை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில், பொலிஸ் அதிகாரிகள் தவறான நடத்தைகளில் ஈடுபடும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகி வருகின்றன.

இந்த நிலையில் ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது பொலிஸ் திணைக்களத்தினுள் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளின் ஒழுக்கம் குறித்து வேறு எந்த அரசு நிறுவனத்தையும் விட திணைக்களம் அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே பொலிஸ் அதிகாரிகளால் சிறிய ஒழுங்கு மீறல்கள் நடந்தாலும், அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2023ஆம் ஆண்டு மாத்திரம் இலங்கையில் பொலிஸாருக்கு எதிராக மொத்தம் 2,448 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரின் செயலற்ற தன்மைக்காக 810 முறைப்பாடுகளும், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக 563 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாரபட்ச செயற்பாடு தொடர்பில் 450 முறைப்பாடுகளும், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக 112 முறைப்பாடுகளும், பொய்யான குற்றச்சாட்டுகளை உருவாக்கியதற்காக 93 முறைப்பாடுகளும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாக 55 முறைப்பாடுகளும் பொலிஸாருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 1 கோடி ரூபா பெறுமதியான இஞ்சியுடன் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 07

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை இஞ்சி, நுரைச்சோலை - இலந்தையடி கடற்பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த இஞ்சி கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி - உச்சிமுனை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் நுரைச்சோலை பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், மூன்று மீன்பிடி இயந்திரப் படகுகள், 3 என்ஜின்கள் மற்றும் இருப்பிடத்தின் திசையைக் கண்டறியும் ஜி.பி.எஸ் கருவியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 29 மூடைகளில் அடைக்கப்பட்ட 1456 கிலோ கிராம் இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை 1 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்டவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை சந்தையில் இஞ்சியின் விலை உச்சத்தை தொட்டிருப்பதால், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இவை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# 10 தாவரவியல் பூங்காக்களை அமைக்க அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஜூன் 07

காலநிலை வலயங்களுக்கு ஏற்ப 10 தாவரவியல் பூங்காக்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய காலி, வவுனியா, அம்பாறை, பொலனறுவை மற்றும் தெனியா ஆகிய இடங்களில் தாவரவியல் பூங்காக்களை விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன,

10 தாவரவியல் பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை தாவரவியல் பூங்காக்கள் திட்டமிடப்பட்ட விதத்தில் காலி - அக்மீமன தாவரவியல் பூங்கா, வவுனியா தாவரவியல் பூங்கா, அம்பாறை, பொலன்னறுவை, தெனியா ஆகிய இடங்களை நாம் இனங்கண்டுள்ளோம். எனவே, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் நாம் இதை அமைக்க திட்டமிட்டுள்ளோம்-என்றார்.

# வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளை சுத்திகரிக்க ரூ.10000

கொழும்பு, ஜூன் 07

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்திகரிப்பதற்காக அரசாங்கம் நிதியுதவியை வழங்க தீர்மானித்துள்ளது.

இதன்படி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபா வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 44 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 4,477 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு வேண்டும்

## ஹரீஸ் எம். பி. கோரிக்கை

கல்முனை, ஜுன் 07

**கல்விசார் நியமனங்களிலும், கல்வி அதிகாரிகள் நியமனங்களிலும் பல பாரபட்சங்கள் தொடர்கின்றன. எமது நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவற்றை மேன்முறையீடு செய்யவும், விரைவான தீர்வுகளைப் பெறவும் "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ அரசமைப்பு ரீதியாக சிறந்த ஏற்பாட்டை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இப்படியான ஏற்பாடு இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கிறது. எமது நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் முன்வர வேண்டும். மேலும், மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்கித் தருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அமைச்சரவை அனுமதியுடன் மாகாண சபைகளினூடாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வரும் கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அண்மையில் கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்தும் துரதிஷ்டமாக அந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே, கூடுதலான ஆசிரியர்களை கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ)



## உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மர நடுகை, சிரமதானம் முன்னெடுப்பு

கல்முனை, ஜுன் 07

உலக சுற்றாடல் தினம் மற்றும் தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகையும் சிரமதானமும் முன்னெடுக்கப்பட்டது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி ஏ. எஸ். எம். பௌசாத்தின் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, பிராந்திய பணிமனை வளாகம் சிரமதானம் செய்யப்பட்டதுடன் மர நடுகையும் இடம்பெற்றது. (எ)

## பரீட்சைக்குத் தோற்றிய 9 பேரும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு



காத்தான்குடி, ஜுன் 07

காத்தான்குடி அல் - ஹிறா மகா வித்தியாலயத்தில் இம்முறை க. பொ. த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் முதலாம் அமர்வில் 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 9 பேரும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 5 மாணவர்கள் 3 ஏ பெறுபேறு பெற்று மருத்துவத் துறைக்கும் 4 மாணவர்கள் விஞ்ஞானப் பிரிவில் ஏனைய துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக விஞ்ஞானத் துறையில் இப் பாடசாலை 100 வீதம் சித்தி மற்றும் பல்கலைக்கழகப் பிரவேசத்தை பெற்றுள்ளது. (எ)

# சர்வதேச சுற்றாடல் தினம் சம்மாந்துறையில் அனுஷ்டிப்பு

சம்மாந்துறை, ஜுன் 07

உலக சுற்றாடல் தினமான ஜுன் - 5 ஆம் திகதியை அனுஷ்டிக்கும் முகமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் கடந்த வாரம் முழுவதும் 51 கிராம சேவகர்கள் பிரிவிலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேசத்துக்குட்பட்ட கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனிபா தலைமையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அந்த நிகழ்வில் உதவிப் பிர



தேச செயலாளர் யூ. எம். அஸ்லம், வெளிக்களப் பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம். நிசாம், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ. எல். சாஜிதா, ஏ. கே. எப். சாமிலா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். டி. எப். சம்ஸத் பேகம், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் இர்பான் மௌலான மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ)

# அம்பாறை மாவட்ட சாதனை மாணவனுக்கு நேரில் சென்று "ரப்" வழங்கிய றிஸ்லி முஸ்தபா

## ரிஷாத் பதியுதீனும் வாழ்த்து

அம்பாறை, ஜுன் 07

வெளியான க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மருத்துவத்துறையில் அம்பாறை மாவட்டத்தில் முதல் இடம் பிடித்த கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மாணவன் இஹ்ஸான் அஹமட்டை வீடு தேடிச் சென்று, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர், தொழிலதிபர் றிஸ்லி முஸ்தபா ஆகியோர் வாழ்த்தி பாராட்டினர். இங்கு றிஸ்லி முஸ்தபா இஹ்ஸான் அஹமட்டுக்கு "ரப்" ஒன்றை பரிசளித்தார்.

இவர் மருத்துவத் துறைக்கு



தெரிவாகியுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். (அ)

## பிளாஸ்ரிக் முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்



காரைதீவு, ஜுன் 07

பிளாஸ்ரிக் கழிவுகள் முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனின் வழிகாட்டலில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை நிலையங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் அதிகம் பாவனையுள்ள இடங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகள்மீது அணு ஆயுதத் தாக்குதல்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை

மொஸ்கோ, ஜூன் 07

**எங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்- இவ்வாறு ஜேர்மனி உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு ரஷ்யாவின் ஜனாதிபதி விளாமிர் புடின் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இதில், இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

உக்ரைனுக்கு, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற சில ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இதன்போது, ஜேர்மனி நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

ரஷ்யாவின் மீது தாக்குதல் நடத்த ஜேர்மனியின் ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்தியிருப்பது, ஆபத்து ஏற்படுத்தும் நடவடிக்கை என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்துள்ளார்.

மேற்கு நாடுகளைத் தாக்க நீண்டதூரம் சென்று தாக்கக் கூடிய ஆயுதங்களை, வேறு சில நாடுகளுக்கு ரஷ்யா வழங்கக் கூடும் என்று எச்சரிக்கை விடும் வகையிலும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்ட உக்ரைன், ஜேர்மனியின் ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்த ரஷ்யா, ஜேர்மனிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எங்களுடைய நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனத் தெரிய வந்தால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என புடின் மீண்டும் உறுதிப்படக் கூறியுள்ளார்.

ரஷ்யாவின் சில பகுதிகள் மீது நீண்டதூரம் சென்று தாக்கக் கூடிய ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் அண்மையில் அங்கீகரித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# காஸ் சிலிண்டர் வெடித்து பாகிஸ்தானில் 18 பேர் பலி

இஸ்லாமாபாத், ஜூன் 07

பாகிஸ்தானில் எரிவாயு (காஸ்) சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் 18 பேர் பலியாகினர்.

பாகிஸ்தான் பரீதாபாத் நகரில் ஹாஸ் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட பலர் சிக்கிக் கொண்டனர். இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்தது.


உரிய அனுமதியின்றி எரிவாயு சிலிண்டர் விற்பனை கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் இவ்வாறான விபத்துகள் ஏற்படுவதாக அரசு நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத எரிவாயு மற்றும் சி. என். ஜி. நிரப்பு நிலையங்களுக்கு எதிராக, கடுமையான நடவடிக்கை எடுக்கும் படி துறைசார் நிறுவன உயரதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு போதிய உபகரணங்கள் இல்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற கனடா தயார்

## பிரதமர் ட்ரூடோ அறிவிப்பு



ஒட்டாவா, ஜூன் 07

பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசுடன் இணைந்து பணியாற்ற தனது அரசு தயாராக உள்ளது.- இவ்வாறு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையே கசப்பான உறவு நீடித்து வரும் நிலையில் ட்ரூடோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய முகவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக கடந்த ஆண்டு ஜஸ்டின் ட்ரூடோ பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்தார். இதனையடுத்து கனடாவிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரியை வெளியேறுமாறு அந்த நாடு உத்தரவிட்டது. இந்தியாவும் இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்தியாவிலுள்ள கனடா தூதரை வெளியேறக் கூறியது.

இந்தச் சூழலில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் ஆட்சிக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். "தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் மோடிக்கு எனது வாழ்த்துகள். இரு நாடுகளையும் சேர்ந்த மக்களின் முன்னேற்றத்துக்காக தங்களது அரசுடன் இணைந்து பணியாற்ற கனடா தயாராகவுள்ளது" என அவர் தெரிவித்தார். (எ)

# லெபனான்மீது வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை வீசி இஸ்ரேல் தாக்குதல்


## மனித உரிமைகள் அமைப்பு தகவல்

பெய்ரூட், ஜூன் 07

வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகள் விழுந்த பிறகு 173 பேருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத்துக்கும், லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா போராளி குழுவினருக்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடிக்கிறது. எல்லையில் நடைபெற்று வரும் இந்த மோதல்களில் லெபனானில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர். இவர்களில் போராளிகளே அதிகமாவர். 70 இற்கும் மேற்பட்டவர்கள் பொதுமக்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், மோதலில் பாதிக்கப்பட்ட தெற்கு லெபனானில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் வெள்ளை பொஸ்பரஸ் எரியூட்டும் குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.



அதில், "லெபனான் மீது நடத்தப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் தாக்குதல் பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயலாகும். இதன்மூலம் சர்வதேச சட்டம் மீறப்பட்டிருக்கிறது. குறைந்தது 5 நகரங்கள் மற்றும் கிராமங்கள் மீது நடத்தப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் தாக்குதலால் மக்களுக்குத் தீக்காயங்கள் ஏற்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை, ஆனால் சுவாச பாதிப்பு குறித்த விவரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் மக்களிடம் கருத்துக்களைக் கேட்டு அந்தத் தகவலையும் மனித உரிமை அமைப்பு தனது அறிக்கையில் பதிவிட்டுள்ளது.


சர்ச்சைக்குரிய வெடிமருந்துகளை மக்கள் வசிக்கும் பகுதிகளில் வீசுவது சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றம் என்று மனித உரிமை சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# சுனிதா வில்லியம்ஸ் வரலாற்று சாதனை!

புளோரிடா, ஜூன் 07

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து உயர் ரக விண்கலமான போயிங் ஸ்டார்லைனரில் விண்ணுக்கு சுனிதா வில்லியம்ஸ் புறப்பட்டார். இந்த புதிய விண்கலத்தில் செல்லும் முதல் விண்வெளி வீராங்கனை என்ற சாதனையை இதன் மூலம் அவர் படைத்துள்ளார்.

புதன்கிழமை இரவு 8. 22 மணியளவில் சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்கு பயணம் மேற்கொண்டார். அவருடன் பேரி வில்மோரும் பயணித்தார். 'அட்லஸ் 5' ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில்



சென்ற இவர்கள் சுமார் ஒரு வார காலம் இந்த விண்கலத்தின் செயல்பாடு குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வார்கள் என நாசா தெரிவித்துள்ளது.

59 வயதான சுனிதா வில்லியம்ஸூக்கு இது மூன்றாவது விண்வெளி பயணமாக அமைந்துள்ளது. அமெரிக்க கப்பல் படை விமானியான அவர், கடந்த 2006 ஆம் ஆண்டில் நாசா மூலம் முதல் முறை தனது விண்வெளி பயணத்தை மேற்கொண்டார். அதனை அடுத்து 2012 ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக விண்ணைத் தொட்டார். இதுவரை 322 நாட்களை அவர் விண்ணில் கழித்திருக்கிறார்.

விண்ணில் நெடுநேரம் நடைபயின்ற முதல் பெண் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர். ஏழு முறை விண்வெளியில் நடை பயின்ற சுனிதா மொத்தம் 50 மணி நேரம் 40 நிமிடங்கள் விண்வெளியில் நடந்திருக்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறகலய குறித்து அடுத்த ஆட்சியில் விசாரணை!

**சாகர காரியவசம் கூறுகிறார்**

கொழும்பு, ஜூன் 07

**பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அத்துடன், அறகலயவின் பின்னணி தொடர்பில் அடுத்த எமது ஆட்சியின்போது முறையாக விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்படும் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் மீண்டுமொரு முறை அவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் இருப்பது உறுதிப்படுத்தப்படும் எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை மொட்டு கட்சியே வெற்றிகொள்ளும் எனவும் உரிய நேரத்தில் வேட்பாளர் பெயரிடப்படுவார் எனவும் அவர் கூறினார். (அ)



# வெள்ளத்தின் தாக்கம் தொடரும்

கொழும்பு, ஜூன் 07

வெள்ளம் படிப்படியாக குறைவடைந்தாலும் சில இடங்களில் வெள்ளத்தின் தாக்கம் தொடரும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கிங் கங்கை மற்றும் நில்வள கங்கைக்கான வெள்ள அபாய எச்சரிக்கை அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

களனி கங்கையின் நீர்மட்டம் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதுடன், களு கங்கையின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெள்ள நிலைமையுடன் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால், அது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளுக்கு தேவையில்லாமல் செல்வதை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களை புனரமைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இலங்கையில் கால் பதிக்கும் ஆஸி. பெற்றோலிய நிறுவனம்!

கொழும்பு, ஜூன் 07

அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் இலங்கையில் தனது எரிபொருள் விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

லங்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஊடாக ஜூலை மாத இறுதி அல்லது ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளடங்கலாக 50 இக்கும் மேற்பட்ட புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்கவுள்ளதாகவும் குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்காக அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் தமது நாட்டுக்கு அடுத்தபடியாக சில்லறை பெட்ரோலிய விநியோக செயற்பாடுகளை விரிவுபடுத்தும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கலாசாலையில் கண்காட்சி



யாழ்ப்பாணம், ஜூன் 07

உலக சுற்றாடல் தினத்தை அடையாளப்படுத்தும் முகமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்த விஞ்ஞான கணித உபகரண கண்காட்சி மற்றும் மரம் நாட்டல் நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக்கொடி, கலாசாலைக்கொடி, சுற்றாடல் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. தேசிய கீதம், சுற்றாடல் கீதம் என்பனவும் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர்களும் கலாசாலை சுற்றாடலை தூய்மையாக பேணுவோம் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை முழு நிலை விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜாவும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் க. சுபோகரனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவன் இ. செந்தூரச்செல்வன் நெறிப்படுத்தினார்.

சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய ஆசிரிய மாணவர் உரையினை கணித நெறி ஆசிரிய மாணவன் ச. சந்திரகுமார் ஆற்றினார்.

வரவேற்புரையினை ஆசிரிய மாணவி த. கீற்றாவும் விருந்தினர்கள் தொடர்பான அறிமுக வுரையை கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர், த. கோபாலக்கிருஷ்ணனும் ஆற்றினர்.

அதிதிகளின் உரையைத் தொடர்ந்து விஞ்ஞான கணித ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினா போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

தொடர்ந்து சூழலை நேசிக்கும் உணர்வுடன் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்த மரங்களை பிரதம விருந்தினர் கலாநிதி த. பிரதீபராஜா, கலாசாலை அதிபர் ச. லலீசன், யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான த. அம்பிகைபாகன் மற்றும் இ. சயந்தன் ஆகியோர் நாட்டினர்.

நிகழ்வின் நிறைவாக கணித விஞ்ஞான உபகரண கண்காட்சி திறந்துவைக்கப்பட்டது. காட்சிக் கூடத்தை பிரதம விருந்தினர் திறந்து வைத்தார்.

ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியில் உள்ள விஞ்ஞான கணித உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அருகிலுள்ள பாடசாலை மாணவர்களுடன் கலாசாலை மாணவர்களும் கலந்து இக் கண்காட்சியை பார்வையிட்டு பயன் பெற்றனர். (அ)

# இந்தியப் பிரதமர் பதவியேற்புக்கு ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு!

கொழும்பு, ஜூன் 07

மூன்றாவது தடவையாக இந்திய பிரதமராக பதவி பிரமாணம் செய்துகொள்ளவுள்ள நரேந்திர மோடியின் பதவி ஏற்பு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிவடைந்த தேர்தலில் வெற்றியீட்டிய நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி ஊடாக வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

நரேந்திர மோடியின் பதவிப் பிரமாண நிகழ்வு நாளை மாலை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தரம் ஒன்றுக்கான மாணவர் சேர்க்கை இம்முறை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 07

பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சியால் பாராளுமன்றில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் 330,000 ஆக காணப்பட்ட இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம், தற்போது 300,000 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை குறையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் கல்வி முறையின் மீது மாணவர்கள் நம்பிக்கை இழந்து வருவதால் பாடசாலைக் கல்வி முறையில் இருந்து விலகி, மேலதிக வகுப்புகளை நோக்கி அவர்கள் ஈர்க்கப்படுகின்றனர்.

எனவே மாணவர்களிடையே நாட்டின் கல்வி முறையில் நம்பிக்கை கொண்டு வரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ)

# வெள்ளத்தில் சிக்கிய நால்வரை காப்பாற்றினார் 17 வயது யுவதி!

கொழும்பு, ஜூன் 07

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை 17 வயது மாணவி ஒருவர் காப்பாற்றிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹங்வெல்ல பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹங்வெல்ல பகுதியில் குறித்த மாணவி வசித்து வந்த வீட்டுக்கு அருகில் அதிக மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த மாணவியின் பக்கத்து வீட்டில் உள்ளவர்களின் வீடு நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்த வீட்டில் இருக்கும் நால்வரும் அங்கிருந்து வெளியேற முயன்றபோதிலும், அதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அவதானித்த குறித்த மாணவி தனது வீட்டில் இருந்து, பாதிக்கப்பட்டவர்களின் வீடு வரை நீரில் நீந்திச் சென்று அவர்களை காப்பாற்றியுள்ளார்.

இவர் வெள்ள நீரில் நீந்திச் சென்று அங்குள்ள நால்வரையும் மீட்டுள்ளமை குறித்த பகுதி வாழ் மக்களிடம் பேசுபொருளாகியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜுலை...

பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

உத்தேசிக்கப்பட்ட புதிய மின் கட்டணத்தின் விவரம் வருமாறு,

முதல் 30 அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 8 ரூபாயிலிருந்து 6 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 20 ரூபாயிலிருந்து 11 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

61 முதல் 90 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 30 ரூபாயிலிருந்து 18 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

91 முதல் 120 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 50 ரூபாயிலிருந்து 30 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மின்சார...

வேண்டும். அரச சேவை தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பது தற்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் 9 ஆயிரம் கோடி ரூபாய் மேலதிக வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்தக் காலப்பகுதியில் 75 இலட்சம் மின்சார பாவனையாளர்களிடமிருந்து 12 ஆயிரம் ரூபாயை மேலதிகமாக பெற்றுள்ளது.

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 5 இலட்சம் மின்பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் செயலாற்றுகையை வினைத்திறனான முறையில் முன்னெடுக்காமல் மின்சார கட்டமைப்பை சீரமைக்க முடியாது. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சட்டத்தினால் எவ்வித மாற்றமும் ஏற்படாது. தனியார் தரப்பினரது பிரவேசத்துக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதனால் திருத்தமுடியாத அளவுக்கு எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் - என்றார். (ஐ)

## ஈழத்தமிழர்...

உணர்கின்றோம்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கென அர்த்தமுள்ளதும் அடிபணியாதது மான சமஷ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத் தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும் என்பதே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அந்தவகையில் தங்களின் அனுசரணையும் அழுத்தமும் இன்றி இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெறமுடியாதென்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

போருக்கு பின்னரும் இன, மத அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் எமது மக்களின் ஆட்சி உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது கட்சியான இலங்கைத் தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியத் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் இந்திய மத்திய அரசு தனது முதன்மையான பணிகளை ஆற்ற முன்வரவேண்டுமென்ற எதிர்பார்ப்பை எமது இனத்தின் கோரிக்கையாக தங்களிடம் முன்வைக்கிறேன்.

இந்திய தேசத்தின் வரலாற்று பக்கங்களில் தனித்துவம்மிக்க தலைவராக, தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் மக்கள் ஆணை பெற்று பாரத பிரதமராக ஆட்சிப் பீடம் ஏறியிருக்கும் தங்களின் பணிகள், இந்திய மற்றும் ஈழ தேசங்களின் நலனுக்கான வரலாற்று பணிகளாய் அமைய வாழ்த்தி நிற்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## நயினை...

19ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பை ரதத் திரு விழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் மறுநாள் சனிக்கிழமை தெப்போற்சவமும் நடைபெறும்.

நயினை அம்மன் திருவிழாவை முன்னிட்டு அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. திருவிழாவில் அதிகளவிலான பக்தர்கள் பங்கேற்க வசதியாக விசேட பேருந்து மற்றும் படகு சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஸ்ரார்லிங்...

ஊடகப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான பொது கலந்தாய்வு விவரம் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எலான் மஸ்க்குக்கும் இடையில் இந்தோனேசியாவில் அண்மையில் நடந்த கலந்துரையாடலை அடுத்தே செய்மதி இணைய சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலை...

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதன்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்வது என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதித் தீர்மானத்துக்கு வரவில்லை. சிறீ லங்கா சுதந்திர கட்சியை மீண்டும் பலப்படுத்தி எதிர்வரும் தேர்தலுக்கு தயாராகி வருகிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மின்சாரசபை...

கூறின. மீறி நடத்தப்பட்டால் இரு நாட்களாவது விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும் அவை வலியுறுத்தின.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையால் சபையில் காலையில் குழப்பம் காணப்பட்டது. எனினும், அரச தரப்பு சட்டமூலம் தொடர்பில் விவாதத்தை ஆரம்பித்து நடத்தியது.

நேற்று தொடர்ந்த விவாதத்தின் முடிவில் பிரதான எதிர்க்கட்சி வாக்கெடுப்பை கோரியது.

இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் மூலம் 44 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்துடன் இணைந்து சட்டமூலத்துக்கு ஆதரவாக சுயாதீன எதிரணி எம். பிக்களான அலி சப்ரி ரஹீம், ஜோன் செனவிரத்ன, அநுர பிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன நிமல் லான்சா, ஐக்கிய மக்கள் சக்தியின் பௌசி ஆகியோர் வாக்களித்தனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவையும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா ஆகியோரும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

மின்சக்தித் துறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில், இந்த சட்டமூலம் கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (ஐ)

# ஹோட்டல் உரிமையாளரின் நகைகள் திருட்டு!

முல்லேரியா, ஜூன் 07

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலனி முல்ல பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரி மையாளரின் அறையிலி ருந்து 94 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் வாதுவை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேகநபர் இந்த ஹோட்டலில் பணியாளராகக் கடமையாற்றியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து தங்க நகை கள் மற்றும் 20 இலட்சத்து 55,000 ரூபாய் பணம் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்தில்...

கஜேந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த 2023 நவம்பர் 19ஆம் திகதி ஓர் இளைஞர் வட்டுக்கோட்டை பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது படுகொலை செய்யப்பட்டார். அவருடைய கொலை தொடர் பாக 4 பொலிஸார் கைது செய்யப் பட்டபோதிலும் கூட அந்த சித்திரவதை கள் நடைபெற்ற நான்கு நாட்களும் அங்கிருந்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிமீது இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கவனம் செலுத்தாமல் இருப்பது ஏன்? இது விடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் (கடந்த செவ்வாய்க்கிழமை) பொன்னாலை பகுதியில் கிருஷ்ணவேணி என்ற ஒரு பெண் தலைமை குடும்பத்தை சேர்ந்த பெண் தனது வளவில் குழாய் கிணறை அமைத்தபோது, அங்கு சென்ற வட்டுக்கோட்டை பொலிஸார், அதற்கான அனுமதி பெறப்படவில்லை என்பதை காரணம் காட்டி அவரிடம் இருந்து 8 ஆயிரம் ரூபாயை கப்பமாக பெற்று சென்றுள்ளனர். அந்தத் தாயின் மகன் க. பொ. த. உயர்தரத்தில் படித்துக் கொண்டிருக்கிறார். பாடசாலை தவிர்ந்த நேரத்தில் கூலி வேலை செய்து அதில் சேமித்த பணத்தில்தான் குழாய் கிணறை அமைத்தார்கள். அந்தப் பணத்தில்தான் 8 ஆயிரம் ரூபாயை 3 பொலிஸார் பிடுங்கிச் சென்றனர். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆறுகால் மடத்தை சேர்ந்த கந்தசாமி சேகரன் என்ற மனநிலை பாதிக்கப்பட்ட நபர், கடந்த 2023 நவம்பர் 14 ஆம் திகதி காரைநகர் பகுதியில் கிராம சேவையாளர் பணிமனையில் சந்தேகத்துக்கு இடமான முறையிலே நிற்கிறார் என்ற தகவல் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. தகவல் தெரிவிக்கப்பட்ட 4 நாட்களின் பின்னர் நவம்பர் 18ஆம் திகதி சிதைந்த நிலையில் அவரின் சடலம் மீட்கப்பட்டது. அது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். அந்தக் கொலை தொடர்பாக வட்டுக் கோட்டைப் பொலிஸாரால் இன்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேபோல், காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவை சேர்ந்த ஒருவர் பொதுமகன் ஒருவரை வாளால் வெட்டியிருக்கிறார். இந்த சம்பவம் தொடர்பாக இன்றுவரை அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார் அவர் தற்காப்பு நடவடிக்கையாக வாள் வெட்டை நடத்தினார் என்றார். ஆனால், இது அப்பட்டமான பொய். தொடர்பான ஆவணங்களை சபையின் நடவடிக்கைக் காக சமர்பிக்கின்றேன். இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கேட்டு கொள்கிறேன் - என்றார். (ஐ)

## சிறீதரன்...

குறித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் சுவிஸின் டாவோஸ் நகரில் நடைபெறும் மாநாட்டில் அவர் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போர்...

தொடர்பிலான தகவல்களை அறிந்தவர்கள் தம்மை தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் பிரிட்டன் பொலிஸார் கோரினர்.

2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊர்காவற்றுறை - நாரந்தனையில் முன்னெடுத்த தேர்தல் பிரசாரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர். தவிர, ஊடகவிலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த தகவல் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் காயமடைந்தனர்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கடந்த ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி லண்டனில் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பில், 2022 பெப்ரவரியில் கைது செய்யப்பட்ட 48 வயது நபரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்கு நேரடி சாட்சியங்கள் அவசியம் என்று தெரிவித்துள்ள, கொமாண்டர் டொமினிக் மர்பி அவ்வாறு தகவல்களை வழங்குபவர்களின் தனிப்பட்ட விவரங்கள் பாதுகாக்கப்படும் - என்று உறுதியளித்துள்ளார்.

“வழக்கைத் தொடர்ந்து கட்டமைக்க முடிந்தவரை நேரில் பார்த்த சாட்சியங்கள் தேவை. இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது நடந்த இச்சம்பவங்கள் குறித்து இதுவரை வெளிப்படுத்தப் படாத தகவல்களை அறிந்தவர்கள் இருக்கின்றமையை நாம் அறிவோம். அவர்கள் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். உங்கள் தகவல் மிகவும் நம்பிக்கையுடன் கையாளப்படும்.”

குறிப்பாக 2000-களின் முற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் அல்லது அந்த நேரத்தில் இலங்கையில் வசித்த உறவினர்கள் அல்லது நண்பர்களாக இருந்தவர்கள் அல்லது அன்றிலிருந்து வெளிநாட்டில் இருந்த, விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களை அறிந்தவர்களை தொடர்புகொள்ள அதிகாரிகள் தயாராக இருப்பதாக டொமினிக் மர்பி குறிப்பிட்டுள்ளார்.

தகவல்களை வழங்க, போர் குற்றங்கள் குறித்த விசாரணை குழுவிற்கு நேரடியாக SO15Mailbox.WarCrimesTeam@met.police.uk. என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப முடியும் அல்லது +44 (0)800 789 321 என்ற இலக்கத்தின் ஊடாக பொலிஸாரை அழைக்க முடியும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அரசியல் நடவடிக்கைகளுக்கான அலுவலகத்தை திறந்தார் ரணில்!

கொழும்பு, ஜூன் 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் நடவடிக்கைகளுக்கான அலுவலகத்தை திறந்து வைத்துள்ளார்.

கொழும்பு - ஃப்ளவர் வீதியில் அமைந்துள்ள குறித்த காரியாலயத்தை நேற்று காலை அவர் திறந்து வைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆலய உபதலைவர் மீது கோடரியால் தாக்குதல்!

படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஜூன் 07

அச்சுவேலி உலவிக்குளம் ஆலயத்திற்கு முன்பாக நேற்று காலை கோடரி வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

உலவிக்குளம் ஆலயத்தின் உப தலைவராக செயற்பட்டுவரும் 38 வயதுடைய அச்சுவேலி உலவிக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீதே கோடரி வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று காலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்தவாறு வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் கோடரி ஒன்றினால் குறித்த இளைஞரை தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் கையில் பலத்த காயத்துக்கு உள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வேலைக்கு செல்வதற்காக சென்று கொண்டு இருந்த போது ஆலயத்திற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் வைத்து வழி மறித்த கும்பல் இளைஞரை சராமாரியாக தாக்கியதில் குறித்த இளைஞன் கைகளில் பலத்த காயம் அடைந்தார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் இராணுவத்தினர் தேர் இழுப்பது பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், அண்மையில் ஆலயத்தை சுற்றி எல்லை வேலியிட முனைந்தபோது, கிராம இளைஞர்களின் ஒரு பகுதியினர் தகராற்றில் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாக இந்த தாக்குதல் நடந்ததா என்றும் சந்தேகிக்கிப்படுகிறது. (அ)

## பொருட்கள் விலை குறைப்பு!

கொழும்பு, ஜூன் 07

சில அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, உருளைக்கிழங்கு 75 ரூபா குறைக்கப்பட்டு 350 ரூபாவிற்கும், கோதுமை மா 5 ரூபாவினால் குறைப்பட்டு 190 ரூபாவுக்கும் வெள்ளை கௌபி 110 ரூபாவினால் குறைப்பட்டு 990 ரூபாவுக்கும் சிவப்பு கௌபி 45 ரூபாவினால் குறைக்கப்பட்டு 950 ரூபாவிற்கும் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காய்ந்த மிளகாய் 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு 780 ரூபாவுக்கும், நெத்தலி 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு 930 ரூபாவுக்கும், கடலைப் பருப்பு 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு 185 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக லங்கா சதோச நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை பார்வையிட்டார் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி



முல்லைத்தீவு, ஜூன் 07

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரஞ்ச் பார்வையிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நேற்று முல்லைத்தீவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையில், அங்கு பல இடங்களுக்கும் விஜயம் செய்தார்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியையும் நேற்று காலை அவர் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

ஐ.நா. வதிவிட பிரதி நிதி உள்ளிட்ட குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி மற்றும் சட்டத்தரணி க.கனேஸ்வரன் ஆகியோரிடம் குறித்த புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர். (அ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணி பிரச்னை நீண்டு செல்கிறது

## சபையில் சுட்டிக்காட்டினார் சஜித்

கொழும்பு, ஜூன் 07

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கான காணி பயன்பாட்டுப் பிரச்னை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்னையாகவே உள்ளது. குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பெரும்பாலான இடங்கள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக வர்த்தமானி வெளியிடப்பட்டிருத்தல் இதற்கு காரணமாகும். அவ்வாறே மக்களுக்கான காணிகளை விடுவிப்பதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலும் பல பிரச்னைகள் காணப்படுவதும் இதற்கு காரணமாக அமைவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (06) வடக்கு-கிழக்கு காணி விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1985 ஆம் ஆண்டு நில அளவீட்டு வரைபடத்தின் படி, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் எஞ்சிய காடுகள் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள அல்லது பிரதேச செயலாளர்களினால் விடுவிக்கக் கோரப்பட்டுள்ள காணியின் அளவு என்ன?

அம்பாறை, மொனராகலை, திருகோணமலை மாவட்டங்களுக்கு, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அண்மையில் விஜயம் செய்தபோது அவர்களது பாரம்பரிய விவசாய நிலங்கள் பறிபோயுள்ளமை தெரிய வந்தது. இந்நிலையில் மீண்டும் தரப்படும் என அரசு கூறினாலும் அது இன்றுவரை வார்த்தையோடு சுருங்கிப்போயுள்ளது. அரசாங்கம் வழங்கிய இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் திகதியை அறிய விரும்புகிறோம்.

விவசாயிகள் பாரம்பரியமாக விவசாயத்தை மேற்கொண்டு வரும் விளைநிலங்களை பாதுகாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வனவளத்தைப் போன்று விவசாயமும் பாதுகாக்கப்பட வேண்டும்

பாரம்பரிய விவசாய நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி பல்வேறு மாவட்டங்களுக்கான தனது விஜயத்தின் போது உறுதியளித்துள்ள போதிலும் அது பேச்சளவில் மட்டுமே இருந்து வருகிறது. பதவி ஸ்ரீபுர, கோமரங்கடவல, மொரவெவ, கந்தளாய், சேருவில, வெருகல், அம்பாறை, மொனராகலை மாவட்டங்களிலும் வடக்கிலும் இந்தப் பிரச்னை நிலவி வருகிறது. அவர்களின் விவசாய நிலங்கள் விடுவிக்கப்படும் வரை மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் - என்றார். (அ)

# மறு அறிவித்தல் வரை மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து!

கொழும்பு, ஜூன் 07

மறு அறிவித்தல் வரை ஊழியர்களின் அனைத்து விடுமுறைகளையும் இரத்துச் செய்யும் சுற்றறிக்கையை இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ளது.

இது நேற்றுமுன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. உத்தேச புதிய மின்சாரச் சட்டம் மற்றும் உயர் நீதிமன்றத்தால் முன் மொழியப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தின் எரிசக்தி மேற்பார்வைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## கஸ்ஸப தேரர் கைது!



கொழும்பு, ஜூன் 07

பலாங்கொடை கஸ்ஸப தேரர் நேற்று வியாழக்கிழமை தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உத்தேச மின்சாரக் கட்டணத்துக்கு எதிராக எதிர்ப்புப் பதாகையை ஏந்தியவாறு பாராளுமன்றத்துக்கு அருகில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டார். (அ)

## 2 மாணவர்களுக்கு இடையில் மோதல்!

ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 07

அம்பாந்தோட்டை-ஆரபொக்க பகுதியில் இரண்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மாணவர் உயிரிழந்துள்ளதுடன், தாக்கிய மாணவர் குறித்த பகுதியிலிருந்து தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தாக்குதலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.